# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.

**O.S.No.42/2016**

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ம் நாள் வாதி / பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.கணேசன் | தாலுகா | : |
| த/ பெயர் | : சேமுனி | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | மதம் | : |
| தொழில் | : | ஜாதி | : |

வா.சா.1
நாள் : 13.10.2022
நேரம் : 11.27A.M

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

எனது தரப்பு ஆவணங்கள்–

1. 24.07.2008 ல் அசல் வழக்கு எண்.125/2007 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1

2. 24.07.2008 ல் அசல் வழக்கு எண்.125/2007 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2

3. 19.09.1947 தேதியிட்ட கருப்பண்ணகுடும்பன் கிரையம் வாங்கிய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 3

4. ஆதிநிலை அளவை பதிவேட்டு சான்றிட்ட நகல்(SLR) (கிராம நிர்வாக அலுவலர் மூலமாகத்தான் குறியீடு செய்யவேண்டும் என்ற ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.4

5. நில அளவை வரைபடம் உண்மை நகல் வா.சா.ஆ.5.(கிராம நிர்வாக அலுவலர் மூலமாகத்தான் குறியீடு செய்யவேண்டும் என்ற ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

6. "அ " பதிவேட்டு நகல் வா.சா.ஆ.6. (கிராம நிர்வாக அலுவலர் மூலமாகத்தான் குறியீடு செய்யவேண்டும் என்ற ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

7. 14.07.2015 ம் தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை CRP (NPD) (MD) No.952/2015 ல் பிறப்புவித்த உத்தரவு அசல் வா.சா.ஆ.7.

8. 15.10.2015 ல் வாதி ஏற்கனவே தாக்கல் செய்து திருப்பப்பட்ட பிராது அசல் வா.சா.ஆ 8.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

விசாரணை முடிவுற்ற நேரம் 11.40 A.M

சாட்சியின் கையொப்பம்